# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 105/2019**

பெயர் : ராஜம்மாள் நாள் : 24.01.2023

வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.1 – ராஜம்மாள் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 12.34</u>

தடபாத்தியம் பத்திரம் எழுதிக்கொண்ட விபரம் சுமார் 4, 5 வருடங்கள் கழித்துதான் எனக்கு தெரிய வந்தது. மோசடியாக எழுதியதாக கூறப்படும் பத்திரத்தை ரத்து செய்ய வேண்டிய மாவட்ட பதிவாளரிடம் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அதேபோல் காவல் நிலையத்திலும் புகார் எதுவும் கொடுக்கவில்லை. தடபாத்திய பத்திரமானது ஏற்கனவே இருந்த பாதைக்குதான் எழுதப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழக்கு பாதையை தவிர வேறு எந்த பாதையும் இல்லை என்பதை தெரிந்து கொண்டு அதை தடுத்தால் அவர்களுடைய நிலத்தை குறைந்த விலைக்கு விற்று சென்றுவிடுவார்கள் என்றுதான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கு பாதையை அதிக தொகையை செலவு செய்து சீர் அமைத்துள்ளார்கள் என்று சொன்னால், சரியல்ல. நான் முழு சம்மதத்துடன் தடபாத்திய பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு, தற்போது நிலத்தின் விலை அதிகமாகிவிட்டதால் தடபாத்திய பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 12.45</u>

ஒப்பம் /ராஜம்மாள்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.